**செய்தி வெளியீடு எண்:610** **நாள்: 23.12.2016**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (23.12.2016) தலைமைச் செயலகத்தில், 2017–ஆம் ஆண்டிற்கான சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியை சிறப்பான முறையில் நடத்திட 'Lead Platinum Sponsor' என்ற வகையில் தமிழக அரசின் பங்களிப்பாக 2 கோடி ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் திரு எம்.ஏ. அழகப்பன் அவர்களிடம் வழங்கினார்.

டென்னிஸ் விளையாட்டில் உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளும் மிக முக்கிய போட்டியான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தால் ஆண்டுதோறும் சென்னையில் நடத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டி ஏ.டி.பி. பன்னாட்டு தரவரிசை போட்டிகளில் ஒன்றாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2005–ஆம் ஆண்டு சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியினை சிறப்பாக நடத்திட முதன் முறையாக தமிழக அரசின் சார்பில் 1 கோடி ரூபாய் நிதி வழங்கினார்கள்.

தமிழ்நாடு டென்னிஸ் சங்கம், 2012–ஆம் ஆண்டு சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியை சிறப்பாக நடத்திட 'Lead Platinum Sponsor' என்ற வகையில் தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கிட வேண்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களின் பெரும் வரவேற்பினை பெற்று உலகின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்கள் பங்கு கொள்ளும் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியை சிறந்த முறையில் நடத்துவதற்கு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கிட ஆணையிட்டார்கள். அதன்படி, சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியை நடத்திட வருடந்தோறும் 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

உலகின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்களோடு, இந்தியாவின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்களும் பங்கு கொள்ளும் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டு அரங்கில் 2.1.2017 முதல் 8.1.2017 வரை நடைபெற உள்ளது.

2017–ஆம் ஆண்டிற்கான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியை சிறப்பான முறையில் நடத்திட 'Lead Platinum Sponsor' என்ற வகையில் தமிழக அரசின் பங்களிப்பாக 2 கோடி ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் திரு எம்.ஏ. அழகப்பன் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் கௌரவ செயலாளர் திரு.சி.பி. நாகேஸ்வர ரெட்டி, முதன்மை செயல் அலுவலர் திரு ஹிடன் ஜோஷி ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.**
**நாள் : 23.12.2016**